# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 165/ந/2026, நாள் 21.09.2026**

K. உதயகுமார்,
ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம். – எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, பூபதிநகர், எண்.131/90 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. உதயகுமார் என்பவரது **14.07.2025** நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் **16.07.2025** அன்று பெறப்பட்டு, **165/ந/2026** என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, பூபதிநகர், எண்.131/90 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. உதயகுமார் என்பவரின் **14.07.2025** நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"ஆற்காடு நகராட்சியில் தூய்மை பணி செய்து வந்த தனியார் ஒப்பந்த நிறுவனம் மீது துறைரீதியான சட்ட நடவடிக்கை மேற்கொண்டதின் பெயரில் தொடர்ந்து அந்த நிறுவனம் பணி செய்ய முடியாத சூழ்நிலை நிலவுவதால், அதை நகர மன்றத் தலைவர் திரு. தேவி பென்ஸ் பாண்டியன் அவர்கள் சாதகமாக பயன்படுத்தி நகராட்சி அதிகாரிகளின் ஒத்துழைப்போடு புதிதாக நான்கு சுய உதவி குழுக்கள் ஆரம்பித்து அதன் மூலம் பணியாளர்களை கொண்டு தூய்மை பணி செய்ய முற்படுகிறார்கள் என தெரியவருகின்றது. எனவே, சுய உதவி குழு மூலம் பணி செய்யும் பட்சத்தில் EPF மற்றும் ESI கட்ட கூடிய தகுதி சான்று பெற்றுள்ளாரா? என்பதையும் இதற்கு முன்பு இது போல் தூய்மை பணி செய்த அனுபவமுள்ள குழுக்களா? என்பதையும் ஆய்வு செய்து தூய்மை பணி செய்ய அனுமதிக்க வேண்டும். ஒருவேளை புதிதாக ஆரம்பித்த குழுவிற்கு தகுதி சான்றுகள் வைத்திருப்பது அரிதே! ஆகையால் தகுதியான நிறுவனமோ அல்லது சுய உதவி குழுவிற்கோ வழங்கினால் மட்டுமே தூய்மைப் பணியாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் மற்றும் சம்பளம் முறையாக கிடைக்கும் என்பதை இதன் மூலம் தெரிவித்து கொள்கிறேன். எனவே புதிதாக ஆரம்பிக்கும் சுயஉதவி குழுவிற்கு வேலை தரக்கூடாது. மேலும் சம்மந்தப்பட்ட சுய உதவிக் குழுக்கள் தகுதி வாய்ந்ததா? என்று ஆய்வு செய்து அதன் பின்பு பணி உத்தரவு வழங்க வேண்டும் என இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.02.2026 நாளிட்ட கடிதம் மூலம் ஆற்காடு நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை பெறப்படவில்லை.

4. இந்நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையர் ஆகியோரை 07.08.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 08.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மேற்படி விசாரணைக்கு உரிய ஆவணங்கள் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்பட்டார்.

5. மனுதாரர் மற்றும் மனுதாரருக்கு உதவியாக திரு. சுரேஷ் ஆகியோர் 07.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு தங்களது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"ஆற்காடு நகராட்சியில் தூய்மை பணி செய்து வந்த தனியார் நிறுவனம் துறை ரீதியான நடவடிக்கையினால் பணி மேற்கொள்ள இயலவில்லை. நகர்மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் அவர்கள் முறைகேடாக பதிவு செய்யப்படாத ஒன்பது சுய உதவிக் குழுக்கள் ஆரம்பித்து பணி உத்தரவு ஆணை வழங்கியுள்ளார்.

மேலும் ஆற்காடு நகராட்சியில் தூய்மைப் பணி மேற்கொண்ட முன் அனுபவம் மிக்க பதிவு செய்யப்பட்ட சுய உதவிக்குழுக்கள் இருக்கும்பட்சத்தில், மேற்கண்ட சுய உதவிக்குழுக்கள் ஆரம்பித்து பணியாளர்களின் சம்பளத்தில் ஊழல் செய்துள்ளது. நகராட்சி ஊழியர்கள் ஒத்துழைப்புடன் புதியதாக சுய உதவி குழுக்கள் ஆவாரம்பூ, செம்பருத்தி, வெற்றி, ரோஜா உள்ளிட்ட 9 சுய உதவி குழுக்களை முறைகேடு செய்வதற்காகவே ஆரம்பித்து, மேற்படி சுய உதவி குழுக்கள் மூலம் பணி செய்து வரும் பணியாளர்களுக்கும் குறைவான சம்பளம் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குழுக்களுக்கு ஜுன், 2025 முதல் நவம்பர், 2025 வரை ஆறு மாதங்கள் EPF/ ESI தொகை பிடித்தம் செய்து செலுத்தப்படவில்லை.

எனவே, மேற்கண்ட தகவல்களை சரிபார்த்து முறைப்படி EPF, ESI தொகைகள் பிடித்தம் செய்து கட்ட ஆவன செய்யும்படியும், முறைகேடாக மேற்படி சுய உதவிக் குழுக்களை வைத்து நடத்தி வரும் நகர்மன்றத்தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பு பணிந்து கேட்டுக்கொள்கிறோம்.".

6. எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.388/2026/எச்1, நாள் 05.08.2026–ல் அலுவலக பணிகள் நிமித்தமாக ஆணையருக்கு பதிலாக நகராட்சி துப்புரவு அலுவலர் (பொ) திரு. க. சத்திய மூர்த்தி மற்றும் இருக்கை எழுத்தர் திரு. வெ. மணிகண்டன் ஆகியோரை விசாரணையில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதை தொடர்ந்து, நகராட்சி துப்புரவு அலுவலர் (பொ) திரு. க. சத்திய மூர்த்தி மற்றும் இருக்கை எழுத்தர் திரு. வெ. மணிகண்டன் ஆகியோர் 07.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"சுய உதவிக் குழுக்களுக்கான EPF/ESI தொகைகள் கட்டப்பட்டு அதற்கான ஆவணங்கள் நகராட்சிக்கு சமர்ப்பிக்க தாமதமாகின்ற காரணத்தினால் பில் தொகை தாமதமாக நகராட்சியில் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. மேலும் பணியாளர்களுக்கு வங்கி கணக்கு (pass book) துவங்குவது தொடர்பாக ஐந்து மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டு pass book பெறப்பட்டது. இதற்கு முன்னர் ஐந்து மாதங்களுக்கு (ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், 2025) செலுத்தப்படாமல் நிலுவையாக இருந்தது. பின்னர் டிசம்பர், 2025லிருந்து தற்போது வரை EPF/ESI தொகைகள் முறையாக செலுத்தப்பட்டு வருகிறது என்ற விவரம் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்பு பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறோம்.".

7. மேலும், **07.08.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜரான நகராட்சி துப்புரவு அலுவலரால் எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.**388/2026/எச்1**, நாள் **05.08.2026** இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

"அரசாணை (நிலை) எண்.**116**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **24.08.2022**ல் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரி M/s. J.P.Vinciple, காஞ்சிபுரம் என்ற நிறுவனத்திற்கு ஆற்காடு நகராட்சியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள பணி உத்தரவு **23.05.2023** அன்று வழங்கப்பட்டுள்ளது. M/s. J.P.Vinciple, காஞ்சிபுரம் என்ற நிறுவனம் **01.06.2023** முதல் ஆற்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வந்தனர்.

மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளின் படியும், வெளிக்கொணர்வு முகமை நிறுவனத்திடம் மேற்கொண்ட ஒப்பந்த நிபந்தனைகள்படியும் இந்நிறுவனம் **143** தூய்மைப் பணியாளர்களையும், **15** ஒட்டுனர்களையும் மற்றும் **7** துப்புரவு பணி மேற்பார்வையாளர்களையும் வழங்க வேண்டும். திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள நியமனம் செய்யப்படும் ஒப்பந்ததாரருக்கு மாதாந்திர ஊதியப்பட்டியல் தொகை அரசால் நிர்ணயித்த KPI Norms படி வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் இந்நிறுவனத்தால் தினந்தோறும் கையாளப்படும் குப்பைகளின் அளவுகோலை வைத்து பட்டியல் தொகை வழங்கப்பட்டது. மேலும் இப்பட்டியல் தொகையில் **50%** பில் பட்டியல் சமர்ப்பித்தவுடன் சரிபார்த்து வழங்கப்பட்டது. மீதமுள்ள **50%** தொகை வழங்கும் முன், இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் அதாவது 80% Collection 20% Segregation ஆகியவற்றை பரிசீலித்து துப்புரவு அலுவலர் அவர்களின் பரிந்துரையுடனும் பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட EPF, ESI ஆகியவற்றை உறுதி செய்த பிறகு வழங்கப்பட்டது. இந்நிலையில் **50%** தொகை முதலில் வழங்கப்பட்டும் மீதமுள்ள தொகையில் பணியாளர்களின் வருகை, வாகனங்களின் பயன்பாடு, பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட EPF, ESI சரிபார்க்கப்பட்டு, பணி குறைபாடுகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டு மீதி தொகை வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் வெளிக்கொணர்வு ஒப்பந்த பட்டியல் சரிபார்த்து பிடித்தங்கள் போக மேற்படி நிறுவனத்தால் சமர்பிக்கப்பட்ட பட்டியல் தொகையில் **70%** முதல் **80%** தொகை மட்டும் வழங்கப்பட்டது. நிறுவனத்தால் நியமிக்கப்படும் பணியாளர்கள் தற்காலிக ஒப்பந்த பணியாளர்கள் ஆவர். EPF, ESI ஆகிய பிடித்தங்கள் செய்து சம்மந்தப்பட்ட பணியாளர்களின் பெயரில் செலுத்த வேண்டியது அந்நிறுவனத்தின் பொறுப்பாகும்.

வெளிகொணர்வு முகமை (OUTSOURCING AGENCY) EPF / ESI சரியான முறையில் கட்ட தவறிய காரணத்தால் பணி ஆணை ரத்து செய்து, மகளிர் சுய உதவிக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. வெளிக்கொணர்வு முகமை M/s. J.P.Vinciple காஞ்சிபுரம் நிறுவனம் பணிசெய்த காலத்தில் தற்காலிக ஒப்பந்த தூய்மை பணியாளர்களில் EPF / ESI விடுப்பட்ட பணியாளர்களுக்கு செலுத்த வெளிகொணர்வு முகமைக்கு மாதம் அளிக்கப்பட்ட தொகையில் EPF / ESI சரிபார்ப்பு தொகை என ரூ.**67,15,387/–**ஐ பிடித்தம் செய்து நகராட்சி கணக்கில் உள்ளது. அத்தொகையை முறையாக EPF / ESI கணக்கிற்கு செலுத்த வெளிக்கொணர்வு முகமை M/s. J.P.Vinciple, காஞ்சிபுரம் நிறுவனத்திடம் வருகை பதிவேடு மற்றும் EPF / ESI செலுத்திய செலான்களை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனத்திடம் இருந்து விவரம் அளிக்கப்படும்பட்சத்தில் தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கிவரும் TN 73 AK – 0605 என்ற இலகுரக வாகனம் விபத்துக்குள்ளாகிய நிலையில், வாகனத்திற்கு விபத்து காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் பழுது நீக்கம் செய்யப்பட்டு (INSURANCE CLAIMED மூலமாக) தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. திரு. ரியாஸ் அவர்கள் உழைப்பு மகளிர் சுய உதவி குழுவில் வேலை செய்து வருகிறார். இக்குழு அரசு அங்கீகாரம் பெற்ற குழு என்பதால் திரு. ரியாஸ் அவர்களுக்கு தாட்கோ மூலமாக ரூ.**46,000/–**

கடன் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது நகராட்சி பகுதியில் நல்ல முறையில் தூய்மை பணி சுய உவிக்குழு மூலம் செயல்பட்டு, அனைத்து சுய உதவிக்குழு பணியாளர்களுக்கும் EPF / ESI எண் பெறப்பட்டு பிரதி மாதம் தனியர்களின் கணக்கில் நகராட்சி மூலம் EPF / ESI தொகை செலுத்தப்பட்டு வருகிறது என்பதை கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. மனுதாரரின் புகார்மனு, மனுதாரர் மற்றும் மனுதாரருக்கு உதவியாக மனுதாரருடன் ஆஜரான திரு சுரேஷ் ஆகியோரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகாட்சி துப்புரவு அலுவலர் மற்றும் இருக்கை எழுத்தர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

நகர்மன்ற தலைவரால் உருவாக்கப்பட்டுள்ள மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் ஆற்காடு நகராட்சியில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது என்பதும், தூய்மைப் பணிபுரியும் சுயஉதவி குழுக்களுக்கு பணி முன் அனுபவம், குழுக்கள் EPF / ESI செலுத்துவதற்கான வழிவகை உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்பதும், சுய உதவி குழுக்களுக்கு குறைவான சம்பளம் வழங்கப்படுகிறது என்பதும், தொகை வழங்குவதில் முறைகேடுகள் காணப்படுகிறது என்பதும், தகுதியான நிறுவனத்திற்கோ அல்லது சுயஉதவி குழுவிற்கோ பணி வழங்கினால் மட்டுமே தூய்மை பணியாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பளம் மற்றும் சலுகைகள் முறையாக கிடைக்கும் என்பதும், குழுக்கள் மூலம் பணிசெய்பவர்களுக்கு ஜுன் 2025 முதல் நவம்பர் 2025 வரை ஆறு மாதங்களுக்கான EPF/ESI தொகை செலுத்தவில்லை என்பதும், EPF, ESI தொகை பிடித்தம் செய்து கட்ட ஆவன செய்ய வேண்டும் என்பதும் மனுதாரரின் புகார் மனு, மனுதாரர் மற்றும் மனுதாரருக்கு உதவியாக விசாரணையில் ஆஜரான திரு. சுரேஷ் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறிய வருகிறது.

M/s. J.P.Vinciple காஞ்சிபுரம் என்ற வெளிகொணர்வு முகமை (OUTSOURCING AGENCY) நிறுவனம் துப்புரவு பணியாளர்களுக்கு EPF / ESI கட்ட தவறிய காரணத்தால் பணி ஆணை ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதும், பணியாளர்களின் EPF / ESI சரிபார்புக்காக M/s. J.P.Vinciple நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டியத் தொகை ரூ.67,15,387/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்பதும், பணியாளர்களின் வருகை பதிவேடு மற்றும் பணியாளர்களின் கணக்கில் EPF / ESI செலுத்திய செலான்கள் ஆகியவற்றை வழங்க M/s. J.P.Vinciple நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது என்பதும், மேற்படி விவரங்கள் பெற்றதும் M/s. J.P.Vinciple நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், தற்போது தூய்மைப்பணிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதும், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கான வங்கி கணக்கு (pass book) துவங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும், EPF/ESI தொகை கட்டியதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்க தாமதமானதாலும் ஜுலை 2025 முதல் நவம்பர் 2025 வரை ஐந்து மாதங்களுக்கு பில்தொகை ஒப்பளிப்பில் தாமதம் ஏற்பட்டது என்பதும், டிசம்பர், 2025 முதல் தற்போது வரை EPF/ESI தொகை முறையாக செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், தற்பொழுது சுய உதவிக்குழு மூலம் நகராட்சி பகுதியில் நல்ல முறையில் தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், அனைத்து சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும் EPF / ESI எண் பெறப்பட்டு பிரதி மாதம் தனியர்களின் கணக்கில் EPF / ESI தொகை செலுத்தப்பட்டு வருகிறது என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி துப்புரவு அலுவலர் மற்றும் இருக்கை எழுத்தரின் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில்,

1) மகளிர் சுய உதவி குழுக்கள் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலோடு செயல்படுகிறதா என்பதையும், துப்புரவு பணி மேற்கொள்ளும் மகளிர் சுயஉதவி குழுவை சார்ந்தவர்களுக்கு முறையாக அரசு நிர்ணயத்துள்ள ஊதியம் வழங்கப்படுகிறதா என்பதையும், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களில், பணி மேற்கொள்ளும் உறுப்பினர்களுக்கு EPF/ESI கணக்கு தொடங்கப்பட்டு EPF/ESI எண் பெறப்பட்டுள்ளதா என்பதையும், பிரதி மாதம் தனியர்களின் கணக்கில் EPF / ESI தொகை

செலுத்தப்பட்டு வருகிறதா என்பதையும், இவ்வகையில் முறைகேடுகள் ஏதேனும் நிகழ்ந்துள்ளதா என்பதையும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் மூலம் ஆய்வு செய்து, அவ்வாய்வறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2) நகராட்சி ஆணையர், முதன்மை பணி வழங்குபவர் (Principal Employer) என்ற நிலையில் தூய்மைப் பணி மேற்கொள்ளும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களின் கணக்கில் EPF / ESI தொகை வரவு வைக்கப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்குமாறும், பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட மகளிர் சுய உதவி குழுக்களின் உறுப்பினர்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்பதையும் கண்காணித்து, பணி வழங்குவதில் முரண்பாடின்றி, எவ்வித புகார்களுக்கும் இடம் கொடாதவாறு அவ்வப்போது ஆய்வு செய்து பணி வழங்கிடுமாறும் எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2026–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 21–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. K. உதயகுமார்,
எண்.131/90, பூபதிநகர்,
ஆற்காடு–632 503,
இராணிப்பேட்டை மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

24/9/26
செயலாளர்.

24/9/26